ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் முழுமதி பொது அறிவுரை ஆசி விளக்கம்

06.09.2025

1. ஆனந்த நடனமிட்ட ஈசன் பாதம்
அடிவணங்கி அரங்கன் யான் அருளாசி
வரமென விசுவாவசு ஆண்டு ஆவணி திங்கள்
பௌர்ணமி விழாவிற்கு உண்டான

2. ஆசி விளக்கமாக அரங்கன் யானும்
என் சீடர் பெருமக்கள் கேட்க
இனிதே விளம்பிடுவேன்
வகைபட அரங்கன் தர்மம்

3. என் சீடர் பெருமக்களால்
வல்லமைபட நிர்வாகம் செய்யப்பட்டு
வளமோடு மக்களுக்கெல்லாம்
சர்வபலமோடு நடந்து வர

4. அரங்கன் என் தர்மத்தை பரிபூரணமாய்
யான் காத்து இன்னும் விரிவுபட
நடக்கும் வண்ணம் பேரருள் புரிவேன்
உயர்வாக தொண்டாற்றுகின்ற

5. நிர்வாகத்திற்கும் நிர்வாகத்தின் கீழ்
சிறப்புற சேவையாற்றுகின்ற
தொண்டர் பெருமக்கட்கும்
அரங்கன் என் பரிபூரணமான பாதுகாப்பும்

6. ஆசியும் உண்டு உண்டு
மிகைபட அதற்குண்டான பொருளாதார பலமும்
மேலான தொண்டர்களின் உடல் உழைப்பும்
எக்காலமும் நிரம்பி பரிபூரணமாய்

7. பூரண சரணாகதி பட இருக்க
அரங்கன் யான் பரிபூரண
அனுகூலமும் ஆசியும் தந்தருள் புரிவேன்
மிகைபட மேலான இந்த தொண்டுகளில்

8. எல்லா பாதுகாப்பும் தந்து
அரங்கன் யான் உடனிருப்பேன்
வகைபட என் தொண்டர்கட்கு
எல்லா பாதுகாப்பும் உண்டு உண்டு

9. இந்தவித நன்னாளில் அன்பர் பெருமக்கட்கும்
வந்து அரங்கன் என் குடில் வந்து
அருளமுது உண்டு அரங்கன் என்
நாமஜெபத்தை கூறுகின்ற உலக மக்கள்

10. யாவருக்கும் அரங்கன் யான்
ஜோதி வடிவாய் ஜோதி சொரூபமாய்
நின்று பேரருள் புரிகின்றேன்
இதனொடு நிர்வாகிகள் சிறப்புற

11. செய்து வருகின்ற சேவைகள்
மகத்தானதாகும் அவர்கட்கும்
உடல்பலம் மனபலம் தேகபலம்
ஆயுள் பலம் தந்து அருள்புரிவேன்

12. இனிதே அன்னதான சேவையை போலே
அரங்கன் என் புகழை பரப்ப
இயங்குகின்ற ஒவ்வொரு கிளைகட்கும்
அரங்கன் யான் தக்க பாதுகாப்பும்

13. அதற்குண்டான தொண்டர்கள் படையும்
தொண்டுக்கு உண்டான பொருளாதார பலமும்
தந்து காத்தருள் புரிகின்றேன்
மிகைபட எவ்வாறு இப்படி தர்மப்பணி

14. உலகமெல்லாம் சிறக்க என்
தொண்டர் பெருமக்கள் இயங்குகின்றாரோ
அவ்வாறே அரங்கன் என் புகழை
பரப்பும் பிம்ப படங்களும்

15. வருகின்ற காலம் சிலை வடிவங்களும்
பேரற்புதம்பட மக்களிடையே விழிப்புணர்வாக
உருவாக்கப்பட்டு சிறக்கவும் என்
பரிபூரண ஆசி உண்டு

16. இதனொடு அரங்கன் யான் தொடர்ந்து
நிர்வாகத்தில் வகுத்த நாட்காட்டிகள்
அதனொடு தாங்கிய பிம்பங்கள்
மற்றும் வருடாந்திரம் செய்யக்கூடிய

17. இந்த விளம்பர சேவைகள்
எவ்வித காலமும் குறைவின்றி

அதற்குண்டான தொகை செயல்பாடுகளில்
எவ்வித சுருக்கமும் இல்லா வண்ணம் விரிவுபட

18. வளர்ச்சிக்குண்டான பணியாக
அரங்கன் என் புகழை
எடுத்துச் செல்கின்ற சேவையாக
நிர்வாகம் சிறப்புற விரிவாகவும்

19. பெருமளவிலும் அன்பர்களை
கொண்டு செல்லும் வண்ணம்
இந்த சேவை சிறக்க அரங்கன் யான்
ஆசியும் அனுகூலமும் அதற்குண்டான

20. அனுமதியும் தருகின்றேன் வல்லமைபட
எல்லா பணிகளும் உலக மக்களிடை
வரவேற்பு உள்ளதாக உண்டாகி
அரங்கன் என் புகழ் உலகெல்லாம் பரவி

21. அரங்கர் மயமாக சன்மார்க்கமே
சிறந்த மார்க்கமாக இந்த உலகமெங்கும்
உருவாக்கப்பட்டு இனிதே வேலவனார்
ஞானமுகனார் இனிதே ஞானபண்டிதனாருடைய

22. ஆளுமைக்கு உண்டான ஆட்சிக்காலமும்
மாற்றமும் உலகே நிரம்பி
பேரற்புதம் நிகழ அரங்கன் யான்
அருள் புரிவேன் அன்னதனால்

23. இன்று நாளிலும் அரங்கர் என் தடத்தில்
நடந்த தர்மம் மிகச்சிறப்பு
சுவைபட அன்பர்கட்கு
உணவில் அருமருந்தாக அற்புதத்தை

24. அரங்கன் யானே உருவாக்கி
அன்பர்களுக்கு ஆசி தந்துள்ளேன்
உள்ளபடி நாளைய தினமும் சிறப்புற
தொண்டர்கள் பெருக ஓங்காரக்குடிலில்

25. உணவிலும் வந்து செல்லும் அன்பர்கட்கு
என் சீடன் கரம்பட நிகழும் ஆசியிலும்
அரங்கன் யானே இருந்து பேரற்புதம் நிகழ்த்துவேன்
மிகைபட இந்தவித காலங்கள்

26. மேலான சில வினைக்குற்றம் சார்ந்த வழி
சிலருக்கு உடல் சார்ந்த பாதிப்பு
சங்கடங்கள் வந்தாலும் அரங்கன் யான்
அரங்கன் யான் அவர்களுள் கலந்து

27. பரிபூரணமாய் இருப்பதாலே சங்கடங்களையும்
பீடை சார்ந்த இடர்களையும் நீக்கி
அவரவர்க்கும் சடுதி மாற்றமும்
ஆரோக்கியம் ஆயுள் பலம்

28. சர்வ பாதுகாப்பும் கூட்டி
அரங்கன் என் புகழோ
அரங்கன் என் மகா சக்தியோ
என்றும் மக்களிடை மங்காத வண்ணம்

29. பாதுகாத்து அரங்கன் யான்
பேரொளியாய் சரவண ஜோதியாய்
சகலருக்கும் அற்புதம் நிகழ்த்துகின்ற
மகா ஜோதியாய் விளங்கி அருள் புரிவேன்

30. அன்னதனால் தொண்டர் பெருமக்கள்
எவ்வித சோர்வும் மனக்கலக்கமும் கொள்ளா
பூரண சரணாகதி மட்டும்
கொண்டு நடந்தால் போதும்

31. அவரவர் வாழ்விலும் அவரவர் குடியிலும்
அற்புதத்தை நிகழ்த்தி அரங்கன் யான்
மிகுதிபட மாற்றங்களும் யோகங்களும்
தந்து காத்தருள் புரிவேன்

அரங்க மகான் யான் அருளிய பொது அறிவுரை ஆசி விளக்கம் முற்றே.

–சுபம்–

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி